**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1. மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.199/2022**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : A1,A2-27.06.2019<br>A3- AB Surrender 07.08.2019<br>Released on : A1,A2-03.07.2019 | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 22.07.2022 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 13.09.2022 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | Nil | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | PW1 –15.12.2023 | 15.12.2023 |
| | | PW2 – 04.01.2024 | 04.01.2024 |
| | | PW3 – 04.01.2024 | 04.01.2024 |
| | | PW4 – 05.02.2026 | 05.02.2026 |
| | | PW5 – 12.02.2026 | 12.02.2026 |



JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:25:11 +0530

| | | | |
|---|---|---|---|
| | | PW6– 12.05.2026 | 12.05.2026 |
| | | PW7– 18.05.2026 | 18.05.2026 |
| 7 | Date of examination of the accused under section 313 of the Court | 19.05.2026 | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable | |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable | |

| | | |
|---|---|---|
| **அரசுக்காக: காவல் ஆய்வாளர்,**<br>வடுவூர் காவல் நிலையம்,<br>குற்றஎண்.134/2019,<br>ச/பி.341, 294(b), 332, 506(2)IPC, | | ..........குற்ற முறையீட்டாளர் |
| | **//எதிர்//** | |
| 1) வினோத்,வயது(21/2022),<br>த/பெ. கர்ணன்,<br>முக்குளம் தர்காஷ்,முக்குளம் சாத்தனூர்,<br><br>2)நாகராஜ் (எ) தினேஷ்,வயது (21/2022),<br>த/பெ. உலகநீதி,<br>தெற்கு தெரு,முக்குளம் சாத்தனூர்,<br>மன்னார்குடி தாலுக்கா.<br><br>3)முருகேசன்,வயது (21/2022),<br>த/பெ. ஜெயராமன்,<br>பெரியார் தெரு,இளவனூர், | /எதிர்/ | ........எதிரிகள் |



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:25:25 +0530

| | | |
|---|---|---|
| மன்னார்குடி தாலுக்கா. | | |

இவ்வழக்கானது கடந்த 22.07.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 19.05.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி.D.துர்காதேவி,B.A.,B.L., நிலை.2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் திரு.A.செல்வராஜு,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (02.07.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..............

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

கடந்த 26.06.2019 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் முக்குளம் கிராமம், திருஞானம் என்பவர் போர்செட் அருகில் கிராம உதவியாளரான வாதி செந்தில் என்பவர் மணல் திருட்டு சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் வந்து புகார்தாரரான செந்தில் என்பவரை வழிமறித்து, 1ம் எதிரி வினோத் ஏய் குச்சிகாரி தேவடியா மகனே என்று திட்டியும், 2 ம் எதிரி தினேஷ் என்கிற நாகராஜ் பின்பக்க தலையில் ஓங்கி கையால் அடித்தும், 3 ம் எதிரி முருகேசன் குச்சிக்காரி மவனே நீ மீனியல்ன்னா பெரிய ஆளா என கூறி இடது கன்னத்தில் ஓங்கி அறைந்தும், 1ம் எதிரி வினோத் கையில வைத்திருந்த கட்டையால் அடித்து கட்டையை காண்பித்து எங்க ஊர்பக்கம் வந்தால் உன்னை காலி செய்துவிடுவேன் என மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1ம் எதிரி வினோத் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 332, 506(ii) IPC ன் படியும், 2 ம் எதிரி தினேஷ் என்கிற நாகராஜ் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 332 IPC ன் படியும் 3 ம் எதிரி முருகேசன் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் படியும் தண்டிக்கத்தக்க



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:25:31 +0530

குற்றம் புரிந்துள்ளதாக வடுவூர் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டன. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு பிரிவு கு.வி.மு.ச.230 ன் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் 1ம் எதிரி மீது பிரிவுகள் 341, 324,294(b), 332, 506(ii) IPC ன் கீழும், 2 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 332 IPC ன் கீழும், 3 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் கீழ் பிரிவு கு.வி.மு.ச பிரிவு 263- ன் ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டன. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ. 1 முதல் 5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவோ இல்லை.

**4. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா.1 செந்தில்** தனது சாட்சியத்தில் தான் கிராம உதவியாளராக வேலை பார்க்கிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 26.06.2019 இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் பஞ்சாயத்தில் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்து தானும், மண்டல துணை வட்டாச்சியர், தலைமையிட துணை வட்டாச்சியர், மகாதேவ பட்டிணம் கிராம உதவியாளர் சேவற் கொடியான் மணல் அள்ளுவதாக சொன்ன அந்த இடத்திற்கு சென்ற போது, சம்பவ இடத்தில் ஒரே கூட்டமாக இருந்தது என்றும், **தான் ஜீப்பில் இருந்து இறங்கி நடந்து சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் மூவரில் தன்னை வினோத் என்பவர் கட்டையால் அடித்து, காலால் எட்டி உதைத்தார்,** கட்டையால் அடித்தில் தனது கழுத்து பகுதியில் வலி ஏற்பட்டதாகவும், நாகராஜ் என்பவர் தகாத வார்த்தைகள் சொல்லி திட்டினார் என்றும் நாளைக்கு



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:25:37 +0530

ஊருக்குள் வந்தால் உன்னை காலி செய்து விடுவேன் என்றும் திட்டினார் என்றும், பிறகு வட்டாச்சியர் இருவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு தன்னை சேர்த்தனர் என்றும், ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ன் மூலமாக புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அசா.2 தமிழ்மணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது விவசாய வேலை பார்க்கிறேன் என்றும், அசா.1 தன்னுடைய ஊர்க்காரர் ஆஜர் எதிரிகள் தனது பக்கத்து ஊர்காரர்கள் என்றும், வழக்கு சம்பவம் தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.3 சின்னதம்பி** தனது சாட்சியத்தில் தான் கூலி வேலை பார்க்கிறேன் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், வழக்கு விபரம் எதுவும் தெரியாது என்றும்,போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்,சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.4 செந்தில்** தனது சாட்சியத்தில் தான் தற்போது நீடாமங்கலம் தாலுக்காவில் துணை வட்டாட்சியராக வேலை பார்த்து வருகிறேன் என்றும், கடந்த 26.06.2019 ஆம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்தது என்றும் அந்த சமயம் தானும் மண்டல துணை வட்டாட்சியர் ஜெயபாஸ்கர், சேவகொடையான் கிராம உதவியார் செந்தில் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முக்குளம் சாத்தனூருக்கு சென்றோம் என்றும், வண்டியின் தடத்தை பார்த்துக்கொண்டே செந்தில் முதலாவதாக சென்றார் என்றும், அப்போது மூன்று நபர்கள் அவரை தாக்கினார்கள் என்றும் எதிரிகள் தான் அவரை தாக்கினார்கள் என்றும் அதன்பிறகு செந்தில் வடுவூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் போலீசார் தன்னை சாட்சியாக விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.5 ஜெயபாஸ்கர்** கோட்டக கலால் அலுவலர் தனது சாட்சியத்தில் தான் கோட்ட கலால் அலுவலராக மன்னார்குடியில் பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 26.06.2019 ம் தேதியன்று இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் ஏரியாவில்



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:25:44 +0530

மணல் அள்ளுவதாக தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடத்திற்கு மகாதேவபட்டினம் கிராம உதவியாளர் சேவல்கொடியோன், செந்தில்குமார் கிராம உதவியாளர் முக்குளம் சாத்தனூர், தான் மற்றும் துணை வட்டாட்சியர் செந்தில் ஆகியோர்கள் சென்றோம் என்றும், செந்திலை தாங்கள் முன்னால் செல்லுமாறு தாங்கள் பின்னால் வருவதாக கூறி அனுப்பினோம் என்றும், கொஞ்ச நேரத்தில் செந்தில் சத்தம் போட்டார் என்றும், தாங்கள் உடனடியாக செந்தில் சத்தம் போட்ட இடத்திற்கு சென்றோம் என்றும், அப்போது செந்தில் தன்னை 3 நபர்கள் அசிங்கமாக திட்டி, அடித்து போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும் செந்தில் தலையில் இருந்து முதுகுதண்டு வரை வலிப்பதாக கூறியதால் தான் அவரை அழைத்து சென்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் தான் எதிரிகளை பார்க்கவில்லை என்றும், எதிரிகள் மூவரும் தாக்கியதாக செந்தில் கூறினார் என்றும் பின்னர் தாங்கள் வடுவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.6 விஜேந்திரன்**- தனது சாட்சியத்தில் தான் திருச்சி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக உள்ளேன் என்றும், கடந்த 27.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அவசர சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்தபோது 43 வயது மதிக்கதக்க செந்தில் என்பவர் சேவற்கொடியான் என்பவரால் அழைத்துவரப்பட்டவரை விசாரித்தில் தன்னை தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாக கூறினார் என்றும் **இரவு சுமார் 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் ரோடு இருச்சக்கர வாகனத்தில் வந்து பின்னால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது தலையின் பின்புறம் கன்றிய காயமாக 4X3 cm அளவில் இருந்தது என்றும்** அவரை உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சை அளித்ததாகவும், மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையானது சொற்பகாயம் என்று கருத்துரை வழங்கினேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 ன் மூலமாக விபத்து பதிவேடு உடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

EXP2/PW1 dated 18.06.2026



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.07.02 11:25:50 +0530

**அ.சா.7 ராஜ்மோகன் உதவி ஆய்வாளர் (ஓய்வு )** தனது சாட்சியத்தில் தான் தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றும், கடந்த 26.07.2019 ம் தேதியன்று மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மன்னார்குடியில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பழனிச்சாமி மகன் செந்தில் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து 11.30 மணிக்கு நிலைய குற்ற எண்.134/2019 இதச பிரிவுகள் 341, 294(பி),332, 506(2) ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் அன்றையதினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்பழகன் மற்றும் சின்னதம்பி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ-4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ-5 மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது அன்றையதினம் 14.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் சாவடி அருகே நின்று கொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இச்சம்பவத்தில் காயம் அடைந்த செந்தில் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜேந்திரன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன் என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 332, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 09.09.2019 ம் தேதி தாக்கல் செய்தேன் என்றும், இத்துடன் அவரது விசாரைணையை முடித்து எதிரிகளின் செய்கையானது ச/பி. 341, 294(b), 332, 506(ii) IPC இதச-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.எதிரிகளிடம் 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல் :**

EXP2/PW1 dated 18.06.2026



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.07.02 11:25:56 +0530

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் :**

இந்த வழக்கில் 1ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 332, 506(ii) IPC ன் கீழும், 2 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 332 IPC ன் கீழும், 3 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** எதிரிகள் மீது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு வழக்கானது நிரூபிக்கப்படவில்லை என்றும் அதனால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8.** இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கின் 1ம் எதிரி மீது பிரிவுகள் 341, 324,294(b), 332, 506(ii) IPC ன் கீழும், 2 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 332 IPC ன் கீழும், 3 ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 7 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சி 4,7 அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சாட்சியான காவல் உதவி ஆய்வாளர் ராஜ்மோகன் அவர்கள் அசா.7 ஆக விசாரணை செய்யப்பட்டும். அசா.3 முதல் அசா.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் புகார்தாரராக அசா. 1 ஆகவும், கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2,4,5 ஆகவும், மருத்துவ சாட்சியாக அசா.6 ஆகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ராஜமோகன், காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) அவர்கள் அ.சா.7 ஆகவும் விசாரிக்கபட்டுள்ளார்கள்.

**10.** இந்நிலையில் 1 முதல் 3 எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள

EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:02 +0530

குற்றச்சாட்டுக்களானது போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுடன் நிரூபிக்கபட்டுள்ளதா? என்பதை தீர்மானித்தாலே இவ்வழக்கின் முடிவிற்கு போதுமானதாக இருக்கும்.

**11) இதச பிரிவுகள் 341, 294(b),324,332,506(2) குற்றசாட்டுகளுக்கான தீர்வு**

கடந்த 26.06.2019 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் முக்குளம் கிராமம், திருஞானம் என்பவர் போர்செட் அருகில் கிராம உதவியாளரான வாதி செந்தில் என்பவர் மணல் திருட்டு சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் வந்து புகார்தாரரான செந்தில் என்பவரை வழிமறித்து, 1ம் எதிரி வினோத் ஏய் குச்சிகாரி தேவடியா மகனே என்று திட்டியும், 2 ம் எதிரி தினேஷ் என்கிற நாகராஜ் பின்பக்க தலையில் ஓங்கி கையால் அடித்தும், 3 ம் எதிரி முருகேசன் குச்சிக்காரி மவனே நீ மீனியல்ன்னா பெரிய ஆளா என கூறி இடது கன்னத்தில் ஓங்கி அறைந்தும், 1ம் எதிரி வினோத் கையில வைத்திருந்த கட்டையால் அடித்து கட்டையை காண்பித்து எங்க ஊர்பக்கம் வந்தால் உன்னை காலி செய்துவிடுவேன் என மிரட்டியதாக 1ம் எதிரி வினோத் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 332, 506(ii) IPC ன் படியும், 2 ம் எதிரி தினேஷ் என்கிற நாகராஜ் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 332 IPC ன் படியும் 3 ம் எதிரி முருகேசன் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் படியான குற்றசாட்டை பரிசீலனை செய்யும் போது,

அரசுதரப்பு பதிவு ஆவணங்களின் படி சம்பவம் நடைபெற்ற நிகழ்வு நாள் 26.06.2019 ம் தேதி 23.00 மணிக்கு. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.06.2019 தேதி 11.30 மணி. குற்றம் நிகழ்வு இடம்- முக்குளம் சாத்தனூர் - தளிக்கோட்டை செல்லும் ரோட்டில் தார் சாலையில் திருஞானம் போர் செட்டுடன் உள்ள வயல் எதிர்- வடுவூர் காவல் நிலையத்திலிருந்து தென்கிழக்கு 15 கி.மீ. தொலைவில் உள்ளது. போலீசார் சம்பவ இடத்தை 27.06.2019 ம் தேதி 13.00 மணிக்கு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.


JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:09 +0530

**12.அசா.1 செந்தில்** தனது சாட்சியத்தில் தான் கிராம உதவியாளராக வேலை பார்க்கிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 26.06.2019 இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் பஞ்சாயத்தில் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்து தானும், மண்டல துணை வட்டாச்சியர், தலைமையிட துணை வட்டாச்சியர், மகாதேவ பட்டிணம் கிராம உதவியாளர் சேவற்கொடியான் மணல் அள்ளுவதாக சொன்ன அந்த இடத்திற்கு சென்ற போது, சம்பவ இடத்தில் ஒரே கூட்டமாக இருந்தது என்றும், **தான் ஜீப்பில் இருந்து இறங்கி நடந்து சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் மூவரில் தன்னை வினோத் என்பவர் கட்டையால் அடித்து, காலால் எட்டி உதைத்தார், கட்டையால் அடித்தில் தனது கழுத்து பகுதியில் வலி ஏற்பட்டதாகவும்,** நாகராஜ் என்பவர் தகாத வார்த்தைகள் சொல்லி திட்டினார் என்று சாட்சியமளித்துள்ளார்.

**13.அசா.6 Dr.விஜேந்திரன்**- தனது சாட்சியத்தில் கடந்த 27.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அவசர சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்தபோது 43 வயது மதிக்கதக்க செந்தில் என்பவர் சேவற்கொடியான் என்பவரால் அழைத்துவரப்பட்டவரை விசாரித்தில் தன்னை தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாக கூறினார் என்றும் **இரவு சுமார் 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் ரோடு இருச்சக்கர வாகனத்தில் வந்து பின்னால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது தலையின் பின்புறம் கன்றிய காயமாக 4X3 cm அளவில் இருந்தது என்றும்** அவரை உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சை அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் "Alleged H/o assault by known person(s) தன்னை தாக்கியதாக கூறினார். முக்குளம் சாத்தனூர் ரோடு இரவு சுமார் 11.00 மணி நடந்து வந்த போது இருசக்கர வாகனம் பின்னால் வந்து தாக்கியதாக கூறினார். அவருக்கு L/e Contussion over occipitil 4x3cm என்று குறிபிடப்பட்டுள்ளது.மேற்படி நபரை சேவர்கொடியோன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்து சேர்த்ததாக


JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:16 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் சாதராண காயம் என்று மருத்துவர் சான்று வழக்கியுள்ளார்.

15. அரசுதரப்பு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 செந்தில் துணை வட்டாச்சியர் தனது சாட்சியத்தில் "கடந்த 26.06.2019 ஆம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்தது என்றும் அந்த சமயம் தானும் மண்டல துணை வட்டாட்சியர் ஜெயபாஸ்கர், சேவர்கொடியோன் கிராம உதவியார் செந்தில் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முக்குளம் சாத்தனூருக்கு சென்றோம் என்றும், வண்டியின் தடத்தை பார்த்துக்கொண்டே செந்தில் முதலாவதாக சென்றார் என்றும், அப்போது மூன்று நபர்கள் அவரை தாக்கினார்கள் என்றும் எதிரிகள் தான் அவரை தாக்கினார்கள் என்றும் அதன்பிறகு செந்தில் வடுவூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்" என்று சாட்சியமளித்துள்ளார்.

16. அ.சா.4 செந்தில் தன்னுடைய குறுக்கு விசாரணையில் "அவருக்கு எங்கு எங்கு காயம் ஏற்பட்டது என்று தெரியது என்றால் சரிதான். சம்பவ நடத்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அ.சா.1 செந்தில் முக்குளம் சத்தனூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நாங்கள் மூவரும் காரில் இருந்து கொண்டு செந்திலை அனுப்பி பார்க்க சொன்னோம் என்றால் சரிதான். செந்தில் என்பவர் மூன்று பேர் சென்ற தடம் இருப்பதாக சொன்னார் நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை.அந்த மூனு பேரின் பெயரையும் செந்தில் தான் என்னிடம் தெரிவித்தார். எனக்கு நேரடியாக தாக்கிய விவரம் தெரியாது" என்று சாட்சியமளித்துள்ளார்.

**17. அ.சா.5 ஜெயபாஸ்கர்** கோட்டக கலால் அலுவலர் தனது சாட்சியத்தில் "கடந்த 26.06.2019 ம் தேதியன்று இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் ஏரியாவில் மணல் அள்ளுவதாக தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடத்திற்கு மகாதேவபட்டினம் கிராம உதவியாளர் சேவல்கொடியோன், செந்தில்குமார் கிராம உதவியாளர் முக்குளம் சாத்தனூர், தான் மற்றும் துணை வட்டாட்சியர் செந்தில் ஆகியோர்கள் சென்றோம் என்றும், செந்திலை தாங்கள் முன்னால் செல்லுமாறு தாங்கள் பின்னால் வருவதாக கூறி அனுப்பினோம் என்றும், கொஞ்ச நேரத்தில் செந்தில் சத்தம் போட்டார் என்றும், தாங்கள் உடனடியாக செந்தில் சத்தம் போட்ட



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:21 +0530

இடத்திற்கு சென்றோம் என்றும், அப்போது செந்தில் தன்னை 3 நபர்கள் அசிங்கமாக திட்டி, அடித்து போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும் செந்தில் தலையில் இருந்து முதுகுதண்டு வரை வலிப்பதாக கூறியதால் தான் அவரை அழைத்து சென்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் தான் எதிரிகளை பார்க்கவில்லை என்றும், எதிரிகள் மூவரும் தாக்கியதாக செந்தில் கூறினார் என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் " சம்பவ இடத்திற்கு செல்ல வேண்டும் என்று தனிப்பட்ட உத்தரவு எதும் என்று மேல் இடத்தில் இருந்து வந்ததா என்றால் இல்லை தகவலின் பெயரில் தான் சென்றோம்" என்று சாட்சியமளித்துள்ளார்.

18. அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சியத்திலிருந்து சம்பவ இடத்திற்கு அ.சா.1 முதற்கொண்டு மற்ற அரசு ஊழியர்கள் பணி நிமிர்த்தமாக சென்றதாக சாட்சியமளித்து இருந்தாலும் குறுக்கு விசாரணையில் முரண்பாடாக சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றார்களா? என்ற ஐயம் எழுகிறது.

19. அ.சா.1 செந்தில் தன்னை 1-ம் எதிரி வினோத் டேங் கவரில் மறைத்து வைத்து இருந்த கட்டை எடுத்து வந்து பின் தலையில் அடித்தார். அதனால் தனக்கு கழுத்தில் வலி ஏற்பட்டது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை அ.சா.6 மருத்துவரும் அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

19. மேலும், அ.சா.1 சம்பவ சமயத்தில் அரசு பணியில் தான் இருந்தார் என்பது குறித்து எவ்வித ஆவணங்களையும் போலீசார் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை. முக்கியமாக அ.சா.1 -யுடன் கிராம நிர்வாக அலுவலர் ஏன்? அன்று சம்பவ இடத்திற்கு வரவில்லை என்று எவ்வித விளக்கமும் இல்லை.எனவே, பிரிவு 332 இதச-வின் கீழான உட்கூறுகள் ஈர்க்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இந்திய உச்ச நீதிமன்றம் "Balu Sudam Khalde And Another Versus The State Of Maharashtra" என்ற வழக்கில்



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:27 +0530

*"இயற்கையான நடத்தையில் சில அலங்கரிப்புகள் அல்லது சிறிய முரண்பாடுகள் இருந்தாலும், காயமடைந்த சாட்சியின் சாட்சியத்தை சந்தேகிக்க முடியாது என்றும் "*

*"காயமடைந்த சாட்சியின் சாட்சியம் அதிக மதிப்பு வாய்ந்தது; கட்டாயமான காரணங்கள் இல்லாமல், அவர்களின் வாக்குமூலங்களை இலகுவாக நிராகரிக்கக்கூடாது" என்று நீதிபதிகள் Sudhanshu Dulia மற்றும் JB Pardiwala அடங்கிய அமர்வு தெரிவித்தது.*

நேரில் கண்ட சாட்சியங்களை மதிப்பிடுவதற்கான நீதித்துறை நிறுவிய கோட்பாடுகள்,

குற்றவியல் வழக்கில் நேர்முக (கண்கூட) சாட்சியங்களை மதிப்பிடுவதற்காக நீதிமன்றங்களால் நிறுவப்பட்ட சில முக்கியமான கோட்பாடுகள் பின்வருமாறு:

---

- ஒரு சாட்சியின் சாட்சியத்தை மதிப்பிடும்போது, அவரது சாட்சியத்தை முழுமையாகப் படிக்கும்போது அது **உண்மையின் தன்மையை** (ring of truth) கொண்டிருப்பதாக தோன்றுகிறதா என்பதே அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

---

- ஒரு நேரில் கண்ட சாட்சியை நீண்ட நேரம் விசாரிக்கும்போது, அவர் சில **முரண்பாடுகளை** (discrepancies) கூறுவது இயல்பானதே. ஆனால், நீதிமன்றங்கள் இதனை மனதில் கொள்ள வேண்டும் — ஒரு சாட்சியின் சாட்சியத்திலுள்ள முரண்பாடுகள் அவரது வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையுடன் **முற்றிலும் பொருந்தாதவையாக** இருக்கும்போது மட்டுமே, அந்த சாட்சியத்தை நிராகரிப்பது நியாயமானதாகும்.

---



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:33 +0530

பொதுவாக, ஒரு சாட்சியிடம் **புகைப்பட நினைவாற்றல்** (photographic memory) இருக்கும் என்றும், ஒரு சம்பவத்தின் விவரங்கள் அனைத்தையும் துல்லியமாக நினைவுகூர வேண்டும் என்றும் எதிர்பார்க்க இயலாது என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் மேற்கோள் காட்டியுள்ளதையும் நீதிமன்றம் கவனத்தில்கொள்கிறது.

**20.** அ.சா.1 சாட்சியின் சாட்சியம் மற்றும் வழக்கு பதிவு ஆவணங்களை பார்வையிடுகையில் அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயம் குறித்து அளித்துள்ள சாட்சியம் இயற்கையாகவும், நம்பும்படியாகவும் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் உள்ளது. மேலும் மருத்துவ ஆவணங்களிலும் அசா1 க்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிடப்பட்டு சொல்லப்பட்டவைகளை அ.சா.1 நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

21. அசா-1 சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் அசா-1 செந்தில் என்பவருக்கு கடந்த 26.06.2009-ஆம் தேதி இரவு 11.00 மணிக்கு 1-ம் எதிரி மரகட்டையை எடுத்து அடித்து, சாதாரண காயம் ஏற்பட்டதற்கு 1-ம் எதிரிதான் காரணம் என்றும், மேற்படி 1-ம் எதிரியின் செயல் இதச பிரிவு 324-ம் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என்று அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22.அ.சா.1-யை எதிரிகள் வழிமறித்து குச்சிகாரி தேவடியா மகனே என்று திட்டியும் 2-ம் எதிரி தினேஷ் (எ) நாகராஜ் பின்பக்க தலையில் ஓங்கி கையால் அடித்தும்,3-ம் எதிரி முருகேசன் குச்சிகாரி மவனே நீ மீனியல்லான என்று கூறி இடது கன்னத்தில் ஓங்கி அறைந்ததாகவும் எதிரிகள் எல்லாம் சேர்ந்து அ.சா.1-க்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை.அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் அரசு பணியில் இருந்த போது எதிரிகள் அ.சா.1-யை தாக்கியதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரிகள் மீதான இதச பிரிவு 341,294(b),332,506(2) கீழான குற்றசாட்டுகள் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

EXP2/PW1 dated 18.06.2026

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:39 +0530

23. இறுதியாக, இவ்வழக்கில் 1ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 506(ii) IPC ன் கீழும், 2ம் எதிரி மீது பிரிவுகள் 341, 332 IPC ன் கீழும், 3ம் எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 332 IPC ன் கீழ் மேற்படி1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் 1 முதல் 3 எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்தும், அரசுத்தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் பிரிவு 324 இதச-ன் கீழ் 1ம் எதிரி குற்றவாளி என்றும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்மானிக்கப்படுகிறது.

24. இவ்வழக்கின் 1ம் எதிரி வினோத், த/பெ. கர்ணன் என்பவருக்கு பிரிவு 4 Probation Offenders Act ன் கீழ் எவ்வித பலன்களும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

25. 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 324 -ன் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்து அவருக்கு அளிக்க வேண்டிய தண்டனை குறித்து 271(2) BNSS ன் கீழ் வினவியபோது,

1ம் எதிரி வினோத்,

"-நான் குற்றவாளி இல்லை என்றும், தன்னை மன்னித்து விடுவிக்கும்படி" கேட்டுக்கொண்டார்.

26. இந்த குற்றச்சம்பவம் நடைபெற்ற விதம், இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் நிலை, குற்றச்சம்பவத்தின் தீவிர தன்மை மற்றும் வழக்கின் சூழ்நிலை மற்றும் வழக்கு நடந்த காலஅளவு ஆகிய அனைத்தையும் பரிசீலனை செய்கையில் இந்த 1ம் எதிரிக்கு இதச பிரிவு 324-ன் படியான குற்றத்திற்கு ரூ.-2000/- அபராதம் மட்டும் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:46 +0530

**மொத்த அபராதத் தொகை ரூ.---2000--/-**

27.இவ்வழக்கில் வழக்கு தடயச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.

28. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 02 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

மன்னார்குடி.

**1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :**

| **சாட்சியின் வரிசை எண்.** | **சாட்சியின் பெயர்** | **குறிப்பு** |
|---|---|---|
| அசா.1 | செந்தில் | புகார்தாரர் |
| அசா.2 | தமிழ்மணி | கண்ணுற்ற சாட்சி |
| அசா.3 | சின்னதம்பி | பார்வை மகசர் சாட்சி-பிறழ் சாட்சி |
| அசா.4 | செந்தில் | கண்ணுற்ற சாட்சி-பிறழ் சாட்சி |
| அசா.5 | ஜெயபாஸ்கர் | கண்ணுற்ற சாட்சி |
| அசா.6 | திரு. விஜேந்திரன், | மருத்துவ சாட்சி |



JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:26:58 +0530

| | | |
|---|---|---|
| அசா.7 | திரு. ராஜ்மோகன்,<br>உதவி ஆய்வளர்(ஓய்வு) | புலன்விசாரணை அதிகாரி |

**2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| **சான்றாவணங்களின் வரிசை எண்.** | **தேதி** | **சான்றாவணம் குறிப்பு** | **சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 27.06.2019 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ. 2 | 28.06.2019 | விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ. 3 | 27.06.2019 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ. 4 | 27.06.2019 | பார்வை மகசர் | அ.சா.7 |
| அ.சா.ஆ. 5 | 27.06.2019 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4.எதிரி தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:27:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:27:11 +0530

3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும்  தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.

JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.02 11:27:18 +0530